1984 மார்ச் 15]

பள்ளி ஆய்வுக் கூடங்கள்

* 101 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ் நாட்டில் இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்களே இல்லாத மேல்நிலைப் பள்ளிகள் 13—2—1982 நாளன்றுள்ளவாறு எத்தனை?

(இ) அப்பள்ளிகட்கு ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(உ) அவை எப்போது முழுமையாகச் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஏதும் இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகளுக்கிடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஆய்வுக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றை தனியார் அல்லது பொது நிறுவனங்கள் கட்டித்தர முன்வந்தால், அவர்களுடைய பெயரை வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கட்டிடங்களைக் கட்டித் தருகின்ற போது, உயிரோடு இல்லாதவர்களுடைய பெயரை வைக்க அல்லது அவர்கள் சொல்லுகின்ற பெயரை வைக்க அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

Ph. D. Allowance.

*102 *Q.*—Dr. T.R. JANARTHANAM (on behalf of Thiru M. Sankaralingam): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Ph. D. Allowance paid to College Teachers working in Tamil Nadu, was withdrawn from 4th September 1979; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. 4—9—1979 க்கு முன் டாக்டர் படி பெற்றுவந்த கல்லூரி ஆசிரியர்கள், படியை தொடர்ந்து பெற்றுவருகின்றனர்.

(இ) கேள்விக்கிடமில்லை.

[1984 மார்ச் 15

செல்வி ஆ. லீலாவதி : கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் பிஎச்.டி. அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அதனை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது நாம் அதை நிறுத்தி விட்டோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. வலம்புரி ஜான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தின் மீதான இந்தப் பொது விவாதத்தில் கலந்துகொள்கின்ற அருமையான வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காக நான் இந்த மன்றத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ வரவு-செலவுத் திட்டம் என்பது ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு சம்பிரதாய நிகழ்ச்சி முறையாக இல்லாமல், சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால், இந்த வரவு-செலவுத் திட்டத்தை மொத்தமாகப் படித்துப் பார்க்கிறபோது அதிலே மூளையைச் செலுத்துகிற இடத்தைவிட இதயத்திற்கு அதிகமான இடம் இருப்பதாக எனக்குப் படுகிறது. காரணம், பொதுவாக என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, என்னென்ன திட்டங்களுக்காக தொகை செலவழிக்கப்படுகின்றது என்பது போன்ற புள்ளிவிவரங்கள் மாத்திரம் இருக்கின்ற தொகுப்பாக இல்லாமல்—காணப்படுகின்ற விவரங்களைப் பார்க்கிறபோது—எந்த அளவிற்குக் கருணையோடு, இரக்கத்தோடு இந்த அரசு மக்களின் நலன்களைக் கருத்திலே வைத்து நடந்துகொள்கிறது என்பதற்கான பல குறிப்புகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் நெடுகிலும் காணப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வரவு-செலவுத் திட்டம் என்று சொல்லி அதற்குள்ளே சென்று பார்க்கும் நிலையில் அதில் இடம் பெற்றுள்ள சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக இன்றைக்கு அரசியல்வாதிகள் என்று எண்ணப்படுபவர்கள்—எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஆளுபவர்களாக இருந்தாலும், எதிரணியில் இருந்தாலும்—சமூகத்திலே அவலமான சூழ்நிலையில் இருப்பவர்கள் என்ற எண்ணம் வெகுவாகப் பரவி வருவதை